

யாழ் உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
உரும்பிராய், கொழும்பு மற்றும் லண்டனை
வசிப்பிடங்களாகக் கொண்டவருமான

அமரர் **திருமதி அன்னலஷ்மி நடராஜா**
அவர்களின் இறைபதம் குறித்த

# நினைவு மலர்

10.06.2017

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும்  பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

உ

# அமரர் திருமதி அன்னலஷ்மி நடராஜா

அன்னை மடியில்

27 * 03 * 1933



ஆண்டவன் அடியில்

09 * 05 * 2017

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த சித்திரைத்திங்கள்
பூண்ட பூர்வபக்க சதுர்த்தசியில் - மாண்பு
நடராஜா பத்தினியார் அன்னலஷ்மி அம்மை
நடராஜன் கழலடைந்தார் காண்

உ

சிவமயம்



## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவது இனியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

**உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

## திருப்புகழ்

அபகார நிந்தைபட்டு ழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக்கு அன்றி நின்பதம் தாங்க என்வெள்ளை உள்ளத்
தண் டாரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமுது ஆர்ந்துஉன் அருள்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடும்கொ லோஉளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூல் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சுஅப்பு இதம்தரு செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந் தாள் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்து அவிசு ஒத்து இருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிதுஎய்த நல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்

கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளால்பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்கண் நல்காய்! உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலாவல்லியே!

சொல் விற்பனமும் அவதானமும் கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்? நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே! சகலகலா வல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய்! படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே!

# அமரர் திருமதி அன்னலக்ஷ்மி நடராஜா அவர்களை பற்றி சில வரிகள்

திருமதி அன்னலக்ஷ்மி நடராஜா அவர்கள் ஈழநாட்டிலே யாழ்ப்பாணத்தின் பெருமைசேர் உரும்பராய் கிராமத்திலே சைவமரபில் வந்த மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியினருக்கு மூத்த மகளாக பிறந்தார். தனது சிறு வயதிலே உரும்பராய் சந்திரோதயத்திலும் பின்பு உரும்பராய் இந்துகல்லூரியிலும் கல்வி கற்றார். சிறுவயதிலிருந்தே பாடும் வல்லமை பெற்ற இவரை இவரது தந்தையார் பாட வைத்து இரசித்து இன்புறுவார். இவரது கல்வியும் இந்தியா சென்று சங்கீதம் கற்கவேண்டுமென்ற நீண்டநாள் எண்ணமும் எதிர்பாராத விதமாக இடைநிறுத்தப்பட்டது. இவர் திருமண வயதை எய்தியபோது தனது தந்தைவழி மாமன் மகனான திரு நல்லையா நடராஜாவை திருமணம் செய்து தங்கள் திருமணவாழ்வின் 50 வருடங்களை (பொன்விழா) 2006 இலே பூர்த்தி செய்தார்.

தங்கள் பிள்ளைகளை சிறந்த முறையிலே கல்வி, சங்கீதம், நடனம் போன்றவற்றை கற்க வைத்ததுடன் அவர்கள் நல்லதோர் நிலைக்கு வரும் வரையில் உறுதுணையாகவும் இருந்தார். மேலும் இளவயதிலே சிவபதமெய்திய தமது நான்காவது குழந்தை ஆனந்தினி பிறந்திருந்தபோது கிருஷ்ணன் வழிபாட்டில் அன்னாரின் ஈடுபாடு கூடியது அதையொட்டி ஒரு கிருஷ்ணர் சிலையை உருவாக்கி அதற்கென்று ஒரு சிறிய கோயிலையும் தான் வசித்த வீட்டின் சாலையோரமாக நிர்மாணித்தார்.

மேலும் இவர் தனது கணவரின் துணையுடன் திருமணத்தின் பின் சிறந்த ஆசான்களிடம் தனது நீண்டநாள் ஆசைப்படி சங்கீதத்தை முறைப்படி பயின்று பண்ணிசை ஆசிரியையாகவும் கடமையாற்றினார். பண்ணிசையிலே இவருடைய ஆர்வத்தையும் திறமையும் கண்ட நல்லை ஆதீனம் இவருக்கு "பண்ணிசை அரசி" என்ற பட்டத்தினையும் அளித்துக் கௌரவித்தது.

நல்லை ஆதீனம், கொக்குவில் இந்துக்கல்லூரி மற்றும் கொழும்பு தமிழ் சங்கம் போன்ற இடங்களில் இவர் தனது பண்ணிசை ஆற்றலால் பல நட்புகளை சம்பாதித்தார்.

மிகவும் உறுதியும் வைராக்கியமும் கொண்ட இவர் எவருக்கும் எந்த நேரத்திலும் மனமுவந்து உதவிசெய்யும் பாங்குடையவர் ஆவார்.

தனது கணவரை 2006ம் ஆண்டு பிரிந்த போது பிள்ளைகளால் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்ட இவர் பிள்ளைகளின் பராமரிப்பில் தனது கடைசிக்காலத்தைக் கழித்து அமரத்துவம் அடைந்தார். இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

# எனது அம்மா- அன்பின் உறைவிடம்

என் அம்மா, அவரது மூத்த மகளான என் மீது பொழிந்த பாசத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. அவ்வாறு வார்த்தைகளால் விபரிக்க முற்படின் அவற்றைப் பற்றி கூறி முடிக்க என் வாழ்நாள் முழுவதும் போதாது. அதனால் இரத்தினச் சுருக்கமாக அம்மாவைப் பற்றிய சில நினைவுகளை உங்களுடன் பகிர்கிறேன்.

எனது வாழ்க்கையில் இசைத்துறையை நான் தேர்வு செய்வதற்கு அடித்தளம் இட்டது மட்டுமல்லாது எனக்கு ஊக்கமும் அளித்து பக்கபலமாகவும் இருந்தது அன்னார் தான். எனது பள்ளிப்பருவத்தில் கொழும்பில் ஒரு பண்ணிசைப் போட்டியில் பங்கேற்பதற்கு என்னைத் தயார்படுத்தி, நான் வெற்றி பெறுவேன் என மிகுந்த நம்பிக்கையுடன் அழைத்துச் சென்றிருந்தார். அந்தப் போட்டியில் நான் பரிசிலை வெல்லாததனால் சோகம் தாளாது அழத் தொடங்கிவிட்டேன்.

அதனைப் பார்த்த என் அம்மாவும் என்னுடன் சேர்ந்து அழத்தொடங்கி விட்டார். பாசத்தின் மிகுதியால் நான் அழுததைப் பார்த்து அழுத போதிலும், என் இசை ஞானம் மீது கொண்ட நம்பிக்கையால் தொடர்ந்தும் மன உறுதியுடன் ஊக்கப்படுத்தி என்னை சங்கீத வித்துவான் ஆகவும் ஆக்கினார்.

தான் அடைந்த துயரங்களை பிள்ளைகளாகிய நாங்கள் எதிர்நோக்கக் கூடாது என்ற எண்ணத்தின் காரணமாக, நான் இந்தியாவிற்கு சென்று இசைத் துறையில் மேற்படிப்பைத்

தொடர வேண்டும் என்ற எனது ஆசையைப் பல இன்னல்களின் மத்தியிலும் நிறைவேற்றினார்.

அன்னாரது இளமைக் காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டும் என்ற கனவு, கடவுச் சீட்டுக்கெனப் புகைப்படம் எடுத்ததோடு கலைந்த மன வருத்தத்தை என்றுமே கொண்டிருந்தார். அதனால் இந்தியாவில் எனது கல்விக்கு எவ்வகையிலும் இடையூறு வராத வகையில் கவனித்துக் கொண்டார். நான் பண நெருக்கடிக்கு உட்படாத வகையில் சரியான வேளைக்கு எப்பொழுதும் பணம் அனுப்பினார். அங்கு என்னையும் எனது விடுதியையும் பார்ப்பதற்குக் கூட வந்திருந்தார்.

எனது சிறுவயது முதற்கொண்டே நான் கேட்டவை எல்லாவற்றையும் வாங்கித் தந்தார். கையில் பணமிருந்தால் உடனடியாகச் செய்தார், இல்லாவிட்டால் அதை நினைவில் வைத்துப் பின்னொரு நாளில் நிறைவேற்றியிருந்தார். எனக்குத் திருமணமான பின்னரும் கூட ஒவ்வொரு நாளும் மாலையில் என்னைப் பார்ப்பதற்கு வந்தார்.

அன்னார் இவ்வுலகைப் பிரிந்த வேதனையையும், அன்னாரது நினைவுகளையும் அனைவருடனும் பகிர்வதால் சற்றே ஆறுதல் அடைகிறேன்.

மூத்த மகள்

ஷாந்தினி மகாதேவா

# அம்மம்மா

எதற்குமே தளராத மனம், தன்னம்பிக்கை, எல்லோருக்கும் உதவும் பண்பு, நல்ல ஞாபக சக்தி, சமூக ஏற்றத் தாழ்வுகள் பார்க்காமல் எல்லோர் மீதும் அன்பு காட்டுதல்; மேற்கூறிய பண்புகளே எனக்கு அம்மம்மா என்றதும் ஞாபகம் வருபவை.

நான் அன்னாரது மூத்த பேத்தி என்பனால் என்னைக் கவனிப்பதற்கு அம்மம்மாவிற்கு உடல் பலமும், நேரமும் இருந்தது. நான் பிறந்தவுடன் என்னை முதன்முதலாகப் பார்த்ததிலிருந்து, பாடசாலை விளையாட்டுப் பயிற்சிகளுக்கு என்னை அழைத்துச் செல்வது வரை தன்னை வருத்தி எனது சின்னச் சின்ன வெற்றிகளிலும், சிறு வயது ஆசைகளை நிறைவேற்றுவதற்கும் மிகுந்த மகிழ்ச்சியுடன் உதவியிருந்தார்.

தன்னுடைய பேரப்பிள்ளைகள் கல்வியில் சிறந்தவர்களாக மட்டுமன்றி கலை ஆற்றல் மிகுந்தவர்களாகவும் விளங்க வேண்டும் என விரும்பினார். ஒவ்வொரு பேரப்பிள்ளையினதும் எதிர்காலக் கல்வித் தகைமை பற்றிய எதிர்பார்ப்பையும், அவர்கள் தற்போது தேர்ச்சி பெறும் கலைகளையும் பற்றிய தனது சந்தோசத்தை என்னுடன் அடிக்கடி பகிர்ந்து கொண்டார்.

என்னுடன் அடிக்கடி தொலைபேசியில் உரையாடினார். அப்போது அன்றைய அரசியல் நிலைமை, தனது சிறு பராயக் கதைகள், தான் திருமணமாகி முதன்முதலில் பார்க்கச் சென்ற "கோமதியின் காதலன்" திரைப் படத்தை முழுமையாகப் பார்க்காமல் வீடு திரும்பிய கதை, தான் வளர்த்த நாய்க்குட்டிகளின் பெயர்கள், சிறு வயதில் தனது ஆச்சிக்கு உதவ அதிகாலையில் இலுப்பங்கொட்டை பொறுக்கச் சென்றது, பாடசாலை விழா ஒன்றின் போது யாரோ கல்லெறிந்து குழப்பிய கதை எனப் பல்வேறு சுவாரசியமான அனுபவங்களைப் பற்றிக் கூறினார்.

இவ்வுலக வாழ்க்கை நிலையில்லாதது என்பதை எனது அம்மம்மாவின் பிரிவு எனக்கு உணர்த்தியிருக்கிறது. அன்னாரு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

வாஷினி மகாதேவா

## My Appamma

When I think of my Appamma, I can truly say that she was a genuine, innocent and bubbly person. She was one special lady, and losing her will always be difficult for my family and I. For the past five years, and definitely over the last few weeks of her life, she really did have a difficult time. She bravely fought through all her illnesses without grumbling or moaning. She would hide all the pain just so she could come home again to be with her children and grandchildren. She was a woman of strength and determination, and was not one to give up. That's something I admire about her.

Appamma was a gentle and kind lady and always had a beaming smile on her face. She cared for all those around her and would go out of her way to help everyone she could. Dad always says that even during times when she didn't have anything, she still gave as much as she could, selflessly to others. She had the loveliest heart and would never hurt anyone.

Appamma was very popular back in Sri Lanka and was friends with *everyone*! She was a character that was loved by so many. There wasn't a single person who did not enjoy her company. She would talk and talk and talk, and occasionally drop a song here and there. No one could possibly leave her presence without feeling a sense of joy in their hearts. She was definitely

a woman with passion for music. She always encouraged me to take up something musical, and was overjoyed whenever she had the chance to sing along with me. She enjoyed spending time and teaching me new songs during the summer holidays, and always encouraged me to keep going with my singing. She was proud of all she had accomplished in life and wanted us to do the same.

After a tough time of being in an out of hospital, Appamma's life came to an end but beautiful memories of her will always remain with us. She is now pain-free, at peace and, safe and sound with our almighty God. I truly believe that she was an amazing woman, and a blessing to us all. And I can't be prouder to call myself her granddaughter.

May you rest in peace dear Appamma. We love you.

**Vithusha Balachandran**

## Ammamma

Whether you live in the same house, or halfway across the world, it isn't hard to feel a sincere connection with Ammamma. There was always a sincere charm in her tone which was evident no matter who talked to. It is this charm that has attracted her to me. Although there is a large distance between us, I would always feel the warmth in her voice whenever I heard her speak on the phone. Her laugh is unforgettable, and is often what draws people in.

You never realize how much you love someone until you lose them. Not only was Ammamma my grandma, she was also my inspiration in many things in life. The daily life lessons that she would tell us would be the epitome of my mind the following day. She was one who believed in feminism and the intelligence of others. I have always respected how much she had cared for every single person she had come in contact with. This faith had unarguably changed not only my life, but the lives of others as well.

It's fairly hard to forget the sound of her beautiful voice. Whether it be singing or talking, anyone would love to hear her for long periods of time. Not only was her voice an escape from all bad things in life, it was essentially her mode of expression. I still remember the time I was asked to sing for a program and once she heard the news, she had eagerly called to help me learn it. Ammamma would slowly correct each and every mistake, along with teaching me every single note. There is a separate soul in her singing that no one can resist. She had helped me to become the artist that I am; she believed in me.

Not only was she able to encourage me in my singing endeavours, but she had also been a major reason as to why I am dancing today. If you don't know me, I devote a good chunk of my free time to dancing, and have been doing so for the past 11 years. Ultimately,

she had done this by being my first ever music teacher. I could see the love and passion she had for the arts when she had taught me 'Alaipayuthe Kanna'. Her expression and understanding of stories and thalam was evident, and ultimately had inspired me to dance. When she was informed by my dance adventures, she would be the first to call and ask what song I was dancing to so she could sing it to me through the phone. Before I left England last year, the last thing she had told me was that she would be coming to my dance arangetram which was set to happen this August. My heart sank. At this point she wasn't able to move her legs. It was this optimism and strength is what I would always appreciate about her, as it not only motivated me to better in dance, but everything that I do in life.

It's common for a child to look like either their mother or their father. Unfortunately for me, I don't really look like either. It wasn't until last year when I saw a picture of young Ammamma that I realized that she was the twin I had always wanted. There was an unavoidable resemblance we both had that had just brought us closer. Her final words to me we to frame a picture of her younger self and put it in my room so that I will never forget her. When she had past, it was almost like I had lost my other half. There is truly no words to explain that moment of devastation.

Although she is gone now, she will always be remembered as the bubbly, strong and optimistic grandma that everyone loved no matter the age. She has lived a strong legacy, and may her soul rest in peace.

We will always love you.
**Harini Kandavel** (Canada)

## பிள்ளைகள் பிரலாபம்

என்றென்றும் எங்களை அன்புடனும் பாசத்துடனும் சீராட்டி பாராட்டி பார்த்தீர்களே அம்மா. கண்ணும் கருத்துமாய் இன்னல்கள் பல தாங்கி நம்வாழ்வை நன்நெறிப்படுத்தினீர்களே அம்மா. பிறந்ததிலிருந்து எமக்கு உண்ணும் உணவு கற்கும் கல்விக்கூடம் ஏன் வாழ்க்கைத் துணைவரையிலும் தாங்கள் தேடிக்கொடுத்தவையே. இன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு தாங்கள் வானகம் சென்றீரோ!


## மருமக்கள் பிரலாபம்

பாசமிக்க பிள்ளைகளை பெற்றெடுத்து பச்சத்துடன் எமக்கு துணையாய் கொடுத்தீர்கள். வீடுவரும் வேளைகளில் தமிழொடு பாட்டும் பேரப்பிள்ளைகளுக்கு கற்றுத்தந்தீர்கள். கற்றவரும் மற்றவரும் அறியா செய்தியெல்லாம் IBC BBC வழியெடுத்தே எமக்களித்தீர். மருமக்கள் போலில்லாமல் பெற்ற பிள்ளைகள் போல் பாசத்துடன் பழகிய சிறு காலத்திலே காலமகள் அழைத்தாளோ !

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

கேலிகள் பலசெய்து போலியாய் பேச்சும் பேசி தமிழும் பல்கலையும் புகட்டினீர்களே. முதுமையின் இறுக்கத்தில் தவியாய் தவித்த போதும் அருகே அழைத்து இறுகக் கட்டி முத்தம் கொடுப்பீர்களே. அம்மம்மா அப்பம்மா எனும் அருகிருந்த பொக்கிஷத்தை கைதவறி தொலைத்துவிட்டு தவியாய் தவிக்கின்றோம்.

## வம்சாவளி


நல்லையா + பொன்னம்மா
அன்னம்மா
நடராசா
அருணேஸ்வரி
மயில்வாகனம் + பொன்னம்மா
குமாரைய்யா
அன்னலட்சுமி (பூமணி)
நடேசன்
மகேந்திரன்
ராஜலட்சுமி
ஷாந்தினி + மகாதேவன்
வாஷினி
விபீஷன்
பாலச்சந்திரன்+ அனுஷா
விதுஷா
ஜேசன்
நிதேஷ்
வசந்தினி + கந்தவேள்
ஹரிஷ்
ஹரிணி
அமரர் ஆனந்தினி
பாலசாந்தன் + ரூபா
ஷோபிகா
சஞ்சுகன்
சுஜந்தினி + மகேஸ்வரன்
மிதேஷா
சஸ்வதன்
மிஹிரன்

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி அன்னலஷ்மி நடராஜா அவர்களின் அமரத்துவத்தால் தாங்கொணாத் துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர், அனுதாபங்களை தெரிவித்து அளவற்ற அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், உற்ற நேரத்தில் உதவிகள் புரிந்தவர்களுக்கும், இம் மலரினை அழகுற வடிவமைத்து அச்சுப்பதிவு செய்த ஜே.ஆர். அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**





Designed & Printed @ JR Print-London, www.jrprint.com T : 0208 503 6643